உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.


தொகுதி உரு] பிரபவ-ஸு வைகாசிமீ [பகுதி எ.

Vol. XXV. May-June-1927. No. 7.


மஹா மாட்சிமைதங்கிய மன்னர்பெருமான்

மைசூர் மஹாராஜா

ஸ்ரீ கிருஷ்ணராஜவுடையார் அவர்களை

ஸ்ரீமத் ஸேதுபதி ஸம்ஸ்தான மஹாவித்வான்

ரா. இராகவையங்கார் பாடிய

## வாழ்த்துக்கவிகள்.

திருவையம்பிகையையநுதினம்பரவுசேதுகாவலர்குலாதிபன்
றிகழுநன்முகவைராஜராஜனருள்செய்பவீறுகலைவலவனைப்
மருவுதென்னர்தமிழ்வாணனேனுனதுமகிமைகண்டுநினைமகிழ்வொடும்
வாழியூழியெனவாசிபாடுகவிமாலைசூடவிவண்வந்தனென்
பொருவுகின்றதிலைமதியுமென்றகுடைபொலியுமந்தணிழன்மலியுநீள்
புகழினின்றபெருமகிழமண்டலபுரந்தராநலவரந்தரும்
கிருபைதங்குகுணநிதியமென்றுலகுகெழுமநின்றசெபதுங்கனே
கிருஷ்ணராஜவுடையாரெனும்பெயர்கெழீஇயதூயமகிபாலனே. (க)

வேறு.

பெருமை நாடுடை யார்பிற ரில்லரென்
றொருமை நாடி யுணர்த்துதன் மேயினர்
எருமை நாடுடை யாருடை யாரெனு
அருமை நாடி யறைவரஃ தன்னதே. (உ)

வேறு.

தவச்சிவ சமுத்திர மெனப்பெயர்கொ டண்ணீர்
சுவர்க்கதல மூற்றவமிழ் தொப்பவுயர் தூய்தாய்
எவர்க்குமுண வாயொழுக லானினிய நின்னூ
டுவர்க்கடலி லாதருறை யொன்றுமிலை யாலோ. (௩)

ஆயுமதி வீரிய வமைச்சரொடு சூழ்ந்து
தேயமுழு தும்மொளி திருத்திவள னூடி
மேயகுடி செல்வமிக வேண்டுநெறி செய்து
தாயைநிக ராகவுயிர் தாங்குவர்நின் போல்யார். (௪)

நூலறிவு பெண்டிர்கொள நோன்கழக நல்கி
மேலறிவு மன்னவர் விரும்பவருள் செய்து
பாலியவி வாகவிடர் பாறவிதி கோலித்
தாலியது காவல்செய் தாரபதிநின் னேர்யார். (௫)

காடுபல நாடுசெயல் கண்டனைய தன்றி
நாடுமிடி தீர்தொழி னயந்துழுத னல்கித்
தேடுபொரு ளாதுலர்தி னங்கொளவ ளித்து
நீடுதவ யோகியினி ராசைகொடு நின்றாய். (௬)

வெள்ளநெறி செய்துதரி சில்லெனவி ளைத்தாய்
தெள்ளுநெறி செல்லவுயிர் நல்லமுறை செய்தாய்
கொள்ளையென வின்றியிறை கொள்வதுகு றித்தாய்
வள்ளலுனை யென்சொலி வழுத்தவறி வோமே. (௭)

வேறு.

இசையும்பல கலையும்புகழ் தொழிலும்மறி வெவையும்
விசயம்பெற வருள்கின்றதுன் மிளிர்வெண்குடை நிழலே
வசையின்றிறை முறைநின்றதுன் மதிகொண்டர லரசே
திசையுங்கமழ் வுறுமுன்னது செறிசந்தன மணமே. (௮)

வேறு.

தனத னுக்குநிக ராக வென்றுபொரு டழைய நின்றுமவை முழுதையு
நினதெ னக்கொள்ளலி லாமலேகுடிக ணிதியெ னத்துணியு நிறையுளாய்

சனக னுக்குநிக ராவை நீயலது சகல நற்சதுர விதானும்
அனக னுக்குநிக ரவை யென்பதுனை யறிவர் கொண்டபெரு நினைவரோ.

வேறு.

நன்பெருமை யுடையகுல வேந்தர்பல ரழுக்கறுக்க நடாவு செங்கோ
லுன்பெருமை நீநினையா யுவந்தெவர்க்கு முறுதுணையா யுற்ற நின்னூற்
றன்பெருமை தானறியாத் தனிமுதலே யாசாகுந் தகவு கண்டேம்
முன்பெருமை நாடென்னு முழுப்பெருமை நாடுடைய முதற்கோ மானே.

நீராளு நிலனுடையாய் நிலனாளும்பொழி லுடையாய்நிறைபொன்வாரும்
பாராளும் பேறுடையாய் பகஃறாளுங் கானுடையாய் பலரின் மேலாய்ச்
சீராளு மறிவுடையாய் திருவாளு நெறியுடையாய் சிதையா தோங்கும்
ஏராளுங் குடியுடையாய் நீயலா துடையாரிங் கெவரா வாரே. (௧௧)

எய்தியநற் றிருநாரா யணபுரமென் றிவ்வுலகோ ரேத்துஞ் சீர்த்தித்
தெய்வதநற் றலந்திகழுந் திருநாடு புரந்துபுகழ் செய்யும் வேந்தே
வைதிகநற் சமயகுரு மடாலயமெ லாமுனது வளத்தா லோங்குஞ்
செய்தியினைத் தெரியாதார் பிறருளரோ திரைகடல்சூழ் செகத்தி லம்மா.

செருவகலாக் காலமென நலம்புரிதல் செய்யாது தீர்ந்த மற்றைத்
திருவகலாத் திறல்வேந்த ருளம்வியக்க வறிவரொடு தெளியச் சூழ்ந்து
கருவகலா வுயிர்க்குறுதி யிதுவென்று கண்டுலகிற் கல்வி யோங்கச்
சருவகலா சாலைமுனந் தாபித்த துன்பெருமை சாற்று மன்றே. (௧௩)

காசியிலே யுயர்சருவ கலாசாலைத் தலைமைநினைக் காத லித்த
வாசியிலேயுனகல்வியறிவொழுக்கமாண்பனைத்து மதித்துக்கொண்டோம்
பேசியிலேசாத்தெரிக்கும்பெற்றியதன் றுன்பெருமைபெரியோரேத்தும்
ஆசியிலே வாழிகிருஷ்ண ராஜவுடை யாரென்னு மரச ரேறே. (௧௪)

வேறு.

கோதுபதி யாதகுரி சில்லுனை வழுத்தும்
ஈதுகவி யுன்சமுக மெய்தும்வண மென்பாற்
சேதுபதி செய்தவுப காரமிதை யானெப்
போதுமற வேனிது புனைந்துரையு மன்றே. (௧௫)

உ

# தமிழ்ப்பஞ்சாங்க ஆராய்ச்சி.

[விருத்தாசலம் ஸ்ரீமான் கே. வி. நாராயணஸ்வாமி ஐயர் எழுதுவது.]

## பஞ்சாங்கம் இன்னதென்பதும் அதன் உபயோகமும்.

ஜோதிஷசாஸ்திரமானது ஹிந்துசாஸ்திரங்களுக்கு நேத்திர ஸ்தானமாயிருக்கிறது. அதற்குச் சூரியன் சந்திரன் முதலான கிரஹங்களின் ஸ்தானங்களும், அச்வினி, பரணி முதலான நக்ஷத்திரங்களின் ஸ்தானங்களும் தெரியவேண்டிய தவசியம். இவற்றைப் பஞ்சாங்கமென்ற ஒருநூலிலிருந்து நாம் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடும். இன்னும் பஞ்சாங்கங்களில் திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் இவை ஒவ்வொருதேதிதோறும் காட்டப்பட்டுவருகின்றன. இவையே பஞ்சாங்க வகைகளாம். இவ்வைந்துவகைகளைக்கொண்டுதான் இந்துக்கள் தங்கள் சாஸ்திரங்களிற் சொல்லியபடி தங்களுக்கேற்பட்ட சுபாசுபக்கிரியைகளை நடத்திவருகிறார்கள்.

தற்காலத்தில் வழங்கிவரும் பஞ்சாங்கங்களின் நிலைமை:—அச்சியந்திரசாலைகள் ஏற்பட்டதுமுதல் பஞ்சாங்கங்களின் எண்ணிக்கை வருஷந்தோறும் மிகுதியடைந்துவருகிறது. அப்படியேற்பட்டிருக்கிற பஞ்சாங்கங்களுக்குள் திதி முதலியவிஷயங்களின் கால அளவைக் குறித்தும், கிரகங்களின் சாரங்களைக்குறித்தும் ஒன்றிற்சொல்லியபடி மற்றொன்றிலில்லை.

உதாரணமாக மாதப்பிறப்பின் காலவிஷயத்தில் வாக்யபஞ்சாங்கங்கள் ஒருவிதமாகவும் திருக்கணிதபஞ்சாங்கங்கள் வேறுவிதமாகவும் சொல்லுகின்றன. இதனால் திருக்கணித பஞ்சாங்கங்களுக்கும் வாக்கிய பஞ்சாங்கங்களுக்கும் தேதிவித்தியாசம் சிலமாதங்களில் ஏற்படுகிறது. தென்னிந்தியாவில் அச்சிடப்படுகிற பஞ்சாங்கங்கள் எல்லாவற்றிலும் சித்திரைமீ 1உ-யை ஒட்டி ரிஷபாயனமென்றும், வைகாசிமீ 1உ-யை ஒட்டி மிதுனாயனமென்றும் இம்மாதிரியே மற்றெல்லா மாதங்களிலும் நெடுநாளாய் எழுதிவருகிறார்கள். அப் பஞ்சாங்கங்களிலொன்

றில் சித்திரைமீ 7உ யையொட்டி ரிஷபாயனத்தையனுசரித்து விஷ்ணு பதியென்றும் வைகாசிமீ 7உ யையொட்டி மிதுனாயனத்தையனுசரித்து ஷடஸீதிபுண்யகாலமென்றும், ஆனிமீ 7உ யொட்டிக் கடகாயனத்தை யனுசரித்துத் தக்ஷிணாயனபுண்ணியகாலமென்றும், இம்மாதிரி மற்ற மாதங்களில் மற்றப் புண்ணியகாலங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. தவிரவும் வைகாசி முதல்தேதியில் சிலர் 'விஷ்ணுபதி'யென்றும் ஆனி முதல்தேதியில் சிலர் 'ஷடஸீதி' யென்றும் ஆடி முதல் தேதியில் சிலர் தக்ஷிணாயனமென்றும் இம்மாதிரி மற்றப்புண்ணியகாலங்களும் அதே பஞ்சாங்கத்தில் காட்டியிருக்கின்றனர். ஆகவே, ஸங்க்ரமண புண்ணிய காலங்கள் எல்லாவற்றுக்கும் சுமார் 23 நாள் கதிவித்தியாசமுள்ள இரண் டிரண்டு தேதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு தேதி களுக்குள் பிரதிமாதத்திலும் 7உ யையொட்டி அயனாம்சத்தையனுச ரித்துக் காட்டியிருக்கிற ஸங்க்ரமணபுண்ணியகாலங்களை நாம் அனுஷ் டிப்பது சரியாவென்றும், மேஷரவி ரிஷபரவி முதலானவைகளை அனு சரித்து முதல் தேதிகளிலாவது முன்மாதங்களின் கடைசித்தேதிகளி லாவது அனுஷ்டிப்பது சரியாவென்றும் விசாரிப்பது அவசியமாகும்.

விஷுவம் உத்தராயனம் தக்ஷிணாயனம் முதலிய சொற்களின் பொருளாராய்ச்சி:—விஷுவம் என்ற வடமொழிப்பதத்திற்கு அஹஸ் முப்பதுநாழிகையுள்ள தினமென்பது பொருள். அயனமென்றசொல், வழி, பிறப்பு, பாதை என்று பொருள்படும். ஆகவே உத்தராயனமென் றால் வடக்குப்பாதை, அல்லது சூரியன் வடக்குநோக்கிச்செல்லும் பாதையென்று பொருள்படும். அதேபோலத் தக்ஷிணாயனமென்பதற்குச் சூரியன் தெற்குநோக்கிச் செல்லும்பாதையென்று பொருள்கூறலாம். உத்தராயனபுண்ணியகாலத்தன்று உள்ள அஹஸ்ஸின் பரிமாணம் மிகக் குறைந்ததாயும் தக்ஷிணாயனபுண்ணியகாலத்தன்று உள்ள அஹஸ்ஸின் பரிமாணம் அதிகமாயும் இருக்கவேண்டுமென்றும் கணிதசாஸ்திரங்களி லிருந்து ஏற்படுகிறது. இவ்வஹஸ்ஸின் கணக்கைக்கொண்டு மேற் சொல்லப்பட்ட ஸங்க்ராந்தி புண்ணியகாலங்களின் தேதிவித்தியாசத் தைக் கவனிக்கும்போது பிரதிமாதமும் 7உ யையொட்டி அயனாம்சத்தை அனுசரித்துக் குறிப்பிட்டிருக்கிற ஸங்க்ரமண புண்ணியகாலங்கள்தான் சரியென்றும், மாதங்களின் கடைசித்தேதிகளிலாவது முதல்தேதிகளி லாவது குறிப்பிடப்பட்டிருக்கிற புண்ணியகாலங்கள் தவறுதலென்றும்

ஏற்படுகிறது. உதாரணமாக: பங்குனிமீ 7உயில் மேஷாயனமென்றும் சற்றேறக்குறைய அதேதினத்தில் அஹஸ் முப்பதுநாழிகையென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சித்திரை 1உயில் அஹஸ் முப்பதுநாழிகையாகக் குறிப்பிடப்படவில்லை. அதேமாதிரி புரட்டாசிமீ 7உயைஒட்டித் துலாயனமென்று குறிப்பிடப்பட்டிருக்கிற தினத்திற்கு அஹஸ் முப்பதுநாழிகையாயிருக்கிறதே தவிர ஐப்பசிமீ த்தில் துலாவிஷு என்று போட்டிருக்கிற முதல் தேதிக்கு அஹஸ் முப்பதுநாழிகையில்லை.

மேஷரவி மேஷாயனம் இவைகளின் பொருளாராய்ச்சி:—மேஷரிஷபாதி ராசிகளின்பெயர்கள் வேதங்களிலாவது அவைபோன்ற முதுநூல்களிலாவது காணப்படவில்லை. இதிலிருந்து வேதகாலங்களில் நக்ஷத்திரமண்டலம் ராசிகளாகப் பகுக்கப்படவில்லையென்று ஏற்படுகிறது. ஆனால் கிரேக்கர்களைப்பார்த்துத்தான் நக்ஷத்திரமண்டலங்களாகப் பகிர்ந்துள்ளார்களென்று இந்துதேசச் சரித்திரத்திலிருந்து தெரிகிறது. ஆகவே மேஷரிஷபாதி பதங்களுக்குக் கிரேக்கர்கள்முதலான மேனாட்டார்கொடுக்கும் பொருள்களை நாமும் கொள்ளவேண்டுமென்று ஏற்படும். அம் மேனாட்டார் மேஷரிஷபாதி ராசிகளின் பெயர்களுக்கு இருபொருள் கொடுத்திருக்கிறார்கள். (1) 30 பாகைகள் அடங்கிய வீடுகள். (2) அப்பெயர்களுக்கேற்ற மிருகங்களின் உருவங்கொண்ட நக்ஷத்திரக்கூட்டங்கள். மேஷமென்ற நக்ஷத்திரக்கூட்டத்திற்கும் மேஷமென்றவீட்டிற்குமுள்ள கதி (பாகை) வித்தியாசந்தான் அயனம்சமென்பது. ஆகவே மேஷாயனமென்றால் மேஷமென்றவீட்டிற்குச் சூரியன் வரும் சமயமென்றும் மேஷரவி என்றால் மேஷமென்ற நக்ஷத்திரக்கூட்டத்திற்குள் சூரியன் நுழையும் சமயமென்றும் நாம் பொருள்கொள்ள வேண்டும்.

மேஷமென்ற வீட்டிற்கு லக்ஷணமென்னவென்றால், அவ்வீட்டிற்குள் சூரியன் நுழையும் தினத்திற்கு அஹஸ் முப்பதுநாழிகையாயிருத்தல் வேண்டும். அன்று சூரியன் நக்ஷத்திரமண்டலத்தில் காணப்படுமிடத்திலிருந்துள்ள 30 பாகைகளுக்குத்தான் மேஷமென்றும் அடுத்த 30 பாகைகளுக்கு ரிஷபமென்றும் இம்மாதிரி மற்ற ராசிகளுக்கும் மேனாட்டார் பொருள்கொள்ளுகிறார்கள். ஆகவே மேஷாயனம் ரிஷபாயனம் முதலியவைகள் மேஷரிஷபாதி வீடுகளுக்குள் சூரியன் நுழையும்

சமயங்களைக்கொண்டு குறிக்கப்பட்டிருக்கிற சங்க்ரமணபுண்ணியகாலங்கள் என்றும், மேஷராவி விருஷபராவி முதலியன மேஷரிஷபாதி பெயர்களுக்கேற்ற நக்ஷத்திரங்களுக்குள், சூரியன் நுழையும் சமயங்களைக் கொண்டு குறிக்கப்பட்டிருக்கிற சங்க்ராந்தி புண்ணியகாலங்கள் என்றும் ஏற்படுகிறது.

ஸாயன நிரயனக்கணக்குகளில் எது கிராஹியம்?:—ஸாயனப்படி வருஷமென்பது ஒரு சித்திராவிஷுவத்திலாரம்பிக்கிறது. ஒருஸாயன வருஷத்தின் காலநீட்டம் நிரக்கில் 365 நாள் 14 நாழிகை 32 விநாடி ஆகிறது. நிரயனப்படி வருஷமென்பது சூரியன் அசுவதிக்குள் நுழையும் சமயத்தில் ஆரம்பிக்கிறது. நிரயனப்படி ஒருவருஷம் 365 நாள் 15 நாழிகை 31¼ விநாடி ஆகிறது. இவ்விரண்டு கணக்குகளுக்கும் வருஷமொன்றுக்கு உத்தேசம் 1 நாழிகை வித்தியாசமிருக்கிறது. அசுவதியில் சூரியன் நுழையும் சமயத்தை வருஷப்பிறப்பென்று ஏற்படுத்தி உத்தேசம் 1500 வருஷங்கள் ஆயிருக்கிறதென்று கணிதசாஸ்த்ர விசாரணையிலிருந்து தெரிகிறது. மேஷத்தை அசுவதிமுதலாக எண்ண வேண்டுமென்றும் அசுவதிக்குள் சூரியன் பிரவேசம்செய்யும் காலத்தை வருஷப்பிறப்பென்றும் கி. பி. 5-வது நூற்றாண்டில் வாராஹமிஹிரர் என்பவர் ஏற்படுத்தினர். அவர் அப்படி ஏற்படுத்தும்போது சித்திரை முதல்தேதியில் அகஸ் 30 நாழிகையும் ஆடிமுதல்தேதியில் மிகநீண்ட அஹஸ்ஸும் ஐப்பசி முதல்தேதியில் அகஸ் 30 நாழிகையும் தை முதல்தேதியில் மிகக்குறைந்த அஹஸ்ஸு மிருந்திருக்கவேண்டுமென்று காலஞ்சென்ற லோகமான்ய திலகர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள 'ஓரியான்' என்ற புத்தகத்திலிருந்து ஏற்படுகிறது. தவிர, வாராஹமிஹிரருக்கு முன்பு இரண்டுதடவைகள் வருஷப்பிறப்பை ருதுகாலங்களுக்கு ஒவ்வும்படி மாற்றியிருக்கிறார்களென்றும் ஏற்படுகிறது. ருதுவாதி காலப்பிரிவுகள் ஸாயனக்கணக்கைச்சேர்ந்தனவேயொழிய நிரயனத்தைச் சேர்ந்தனவல்ல. சித்திரை வைகாசி வஸந்தருதுவென்றும் ஆனி ஆடி கிரீஷ்மருதுவென்றும் இம்மாதிரி வருஷத்தை ஆறு ருதுக்களாகப் பகிர்ந்துள்ளார்கள். வருஷங்களுக்கேற்படுத்தியிருக்கிற 6 பிரிவுகள் வாராஹமிஹிரர்காலத்தில் பிரத்தியக்ஷத்திற்குச்சரியா யிருந்திருக்கக்கூடுமானாலும் இப்பொழுது சரியாயிருக்கவில்லை. அயனும்சம்

சுமார் 23 பாகைகளாயிருப்பதால் அந்த ருதுப்பிரிவுகள் இப்பொழுது 23 நாட்கள் தவறுதலாயிருக்கின்றன. மார்ச்சுமீ 22உக்குச்சரியான பங்குனிமீ 7உ-யையொட்டி வசந்தருது கிரமப்படி ஆரம்பித்தபோதிலும் நமது பஞ்சாங்கங்களின்பிரகாரம் எப்ரல் 13உக்குச் சரியான சித்திரை மாசம் 1உ வரையில் வசந்தருது ஆரம்பிப்பதில்லை. ஆகவே பிரத்தியக்ஷமாயுள்ள ருதுக்களுக்கும் பஞ்சாங்கங்களிற் சொல்லியிருக்கிற ருதுக்களுக்கும் தற்காலம் 23 நாட்கள் கதிவித்தியாசமிருக்கின்றது. இதைச் சுமார் 10000 வருஷங்களுக்குக் கவனியாது விட்டுவிடுவோமானால் பஞ்சாங்கத்தில் உத்தராயன ஆரம்பமென்று சொல்லும்போது பிரத்தியக்ஷத்தில் தக்ஷிணாயனவாரம்பமாயிருக்கும். ஆகவே இதுவிஷயத்தை இப்பொழுதே கவனிக்கவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. நாம் சிராத்தாதி காரியங்கள் அனுஷ்டிக்கும் திதியைக் கவனிக்கும்போது அவைகள் நிரயனப்படி சரியாயிருந்தாலும், ஸாயனப்படி சரியல்லவென்று ஏற்படுகிறது. தவிர ஆடிப்பூரம், பங்குனிஉத்திரம் முதலான உத்ஸவாதிகள் மாதாரம்பவித்தியாஸங்களினாலே மாறுபட்டு வருகின்றன.

முடிவு:—வருகிற விபவவருஷத்தைப் பங்குனிமீ 9-ந்தேதியே ஆரம்பிக்கலாமாவென்றும் சௌரமான மாதங்களை ஸாயனக்கணக்குப் பிரகாரம் ஏற்படுத்திக்கொள்ளலாமாவென்றும் தர்மசாஸ்திரத்திலும் ஜோதிடசாஸ்திரத்திலும் தேர்ந்தவர்களைக்கொண்டு பரிசீலனைசெய்து தகுந்த ஏற்பாடுகளைச்செய்யவேண்டியது அவசியம். இதுவிஷயத்தில் எல்லா மடாதிபதிகளும் எல்லா ஹிந்துராஜாக்களும் கவலை எடுத்துக்கொண்டால் காரியம் சீக்கிரம் முடிவுபெறும்.

—

# கருவி.

ஒருவன் மணி பொன்முதலிய வளமும், உருவின்மிக்க, உடம்பும், உயர்குடிப்பிறப்பும், ஆகிய இவைமுதலியவற்றைப்பெறாது நூற்பயிற்சி யொன்றுமேயுடையனாயினும் அஃ தவனை அச்செல்வவளமாதியபெற்றோரினும் மிக்கோனாயியற்றுமென்பதொருதலை. இதனை,—

"களர்நிலத்துப்பிறந்தவுப்பினைச்சான்றோர்
விளைநிலத்துநெல்லின்விழுமிதாக்கொள்வர்
கடைநிலத்தோராயினுங்கற்றறிந்தோரைத்
தலைநிலத்துவைக்கப்படும்."

"நுண்மாணுழைபுலமில்லானெழினலம்
மண்மாண்புனைபாவையற்று."

என்பனவாதிய மூதுரைகள் வற்புறுத்துகின்றன. ஆகலின் நூற்பயிற்சி ஒவ்வொரு ஆன்மாக்கட்கு மின்றியமையாததொன்றாகும். ஆயின் அந்நூல்கடாம் யாவையோவெனின் சின்னாட்பல்பிணிச் சிற்றறிவோராற் கற்கத்தக்கவை இவையென ஆன்றோரா னியமிக்கப்பெற்ற அறம், பொருள், இன்பம், வீடென்பவற்றையுணர்த்துவனவும், அவற்றைக் கற்றற்கு உபகரணமாயுள்ளவற்றை யுணர்த்துங் கருவிநூல்களுமாம்.

கருவிநூல்களின்கண் உணர்த்தும் உபகரணங்களாவன: எண்ணும் மொழியுமாம். இவை உபகரணங்களாமாற்றை,—

"எழுத்தறியத்தீருமிழிதகைமைதீர்ந்தான்
மொழித்திறத்தின்முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்தநல்லோன்முதனூற்பொருளுணர்ந்து
கட்டறுத்துவீடுபெறும்."

எனவும்,

"ஆதிமுதலொழியவல்லாதனவெண்ணின்
நீதிவழுவாநிலைமையவால்—மாதே

அறமார்பொருளின்பம்வீடென்றிவற்றின்
றிறமாமோஎண்ணிறந்தாற்செப்பு."

எனவும் கூறிய இவ்வுரைகளா னறிக.

"எழுத்தறியத்தீரும்" எனவும்,
"எண்ணெண்பவேனையெழுத்தென்ப" எனவும்,
"எண் ணுமெழுத் துங்கண்ணெனத்தகும்" எனவும்,
"ஏரணங்காணெனபரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்."

எனவும் ஆன்றோரெல்லாரும் எண்ணொழிந்த கருவி எழுத்தேயெனக் கூறினாராயினும், எழுத்தின்காரியமாகிய சிறப்புக்கருவியெனப்படும் சொல்லும், சொல்லின்யாப்பும், சொற்குவிடயமாகியபொருளும், சொற்பொருள்களினணிகளும் அதனுளடங்கும். நன்னூல் விருத்தியுரையாசிரியர் சிறப்புப்பாயிரவிருத்தியுரையில் "எழுத்தென்றது இயற்றமிழை," எனவுரைத்துச்சென்றதூம் ஈண்டு நோக்கத்தக்கது. இனி ஆசிரியர் தொல்காப்பியனார் யாப்பணியென்பனவற்றைப் பொருளிலடக்கி எழுத்து, சொல், பொருளென மூன்றாகப் பகுத்துக்கூறினாற்போல வள்ளுவனாரும் ஏனையாரும் சிறப்பிலவாகிய ஏனையநான்கும் சிறப்புடைச் சொல்லின்கண் அடங்குதலின் எண்ணொழிந்தகருவி சொல்லேயெனக் கூறவந்தாராயினும் அவைநான்கும் இச்சொல்லின்கண் அடங்கியுள்ளன வென்பதை நமக்குவிளக்கிய ஆகுபெயராக எழுத்தெனக்கூறினார் என்க.

எழுத்தென்றது சொற்குக்காரணமாயும் பொருள் சொற்குவிடயமாயும் யாப்பு சொல்லின்யாப்பாயும் அணி சொற்பொருள்களினணிகளாயும் இருத்தலின் சொல்லெனவே அவையடங்கும்.

சொல்லே சிறப்புடைக்கருவி யென்பதற்கும், அதுவே அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றையுணர்த்துவனவற்றிற்கு முக்கியக் கருவியென்பதற்கும் "அறமுதலிய நான்கற்குங் கருவி எழுத்துமுதலிய ஐந்தே: அவற்றுள்ளும் நான்கற்குங்கருவி சொல்லே, அச்சொல்லிற்குக் கருவி யதுவே; ஆகையால் எல்லாவற்றினுஞ் சொல் சிறப்புடைத்து" என்னும் இலக்கணக்கொத்துரையாசிரியர்திருவாக்கே சான்றுபகரும்.

இதுபற்றியன்றே வடநூலாரும் சத்தசாத்திரமெனவழங்குப. இவர்வழங்கியாங்கே நம்மனோரும் மொழிநூல் சத்தநூல் என வழங்கியுள்ளார்களென்பதை,—

"சத்தமெய்ஞ்ஞானந்தருக்கஞ்சமயமே
வித்தகர்கண்டவீடுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ்வைந்துமறிவான்தலையாய
சிந்திப்பிற்சிட்டன்சிறந்து.

என்னுஞ் சிறுபஞ்சமூலச்செய்யுள்முதலியவற்றாற் றெரியலாம்.

இனி எண்ணுவது கணிதம் என வொருசாராரும் தருக்கமென வொருசாராரும் கூறுப.

எழுத்தென்பது "உந்தி முதலா முந்துவளி தோன்றித், தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்"பல் அண்ணம் நாமுதலியவற்றின் முயற்சிகளான் மொழிக்குக் காரணமா யெழு மொலியாம். இனி ஒருசாரார் அணுத்திரளின்காரியமாயும் மொழியின்காரணமாயுமுள்ளவொலிஎன்பர்.

சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையா னொற்றுமையுடைத்தாய்ப் பொருள்குறித்துவருவது.

பொருளாவது அச்சொல்லின்பகுதியாகிய செய்யுளாந்தொடர் மொழிக்கண் முதுபுலவரா லடைக்கப்பட்டதாகும். அது, அகம் புறம் என இருவகைப்படும்.

"அகப்பொருளாவது ஒத்தஅன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின்பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வேநுகர்ந் தின்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே யகத்தேநிகழ்கின்ற இன்பத்திற் ககமென்றது ஆகுபெயராம்" எனவும், "இதனை யொழிந்தன ஒத்த அன்புடையார்தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்துணரப்படுத லானும் இவை இவ்வாறிருந்தவெனக் கூறப்படுதலானும் அவை புறமெனவேபடும்" எனவும் நச்சினார்க்கினியர் கூறியதுகொண்டு அகத்தே நிகழுந்தன்மைநோக்கிக் காமவின்பம் கூறப்படாததென்றும் எல்லார்க்கும் துய்த்துணரப்படுதலின் அஃதொழிந்தவை கூறப்படுவவென்றும் கொள்ளின் மக்கள்மெய்தீண்டல், தென்றல், தண்ணீர், பஞ்சணை, பட்டணை முதலியவற்றாற்பெறும் ஊற்றின்பமும்; கன்னற்கட்டி, பால், தேன், மாங்கனி, பலாக்கனி, கதலிக்கனி, பாயசம், புளிங்கறி முதலிய

வற்றாற்பெறும் வாயின்பமும்; மக்கள்வனப்பும், தேசவனப்பும், வீட்டின் வனப்பும், சித்திரவனப்பும், வேடவனப்பும் முதலியவற்றாற்பெறும் கண்ணின்பமும்; மலர், சந்தனம், கத்தூரி, புனுகு முதலியவற்றாற் பெறும் மூக்கின்பமும்; குதலைமொழி, குயிலொலி, குழலொலி, யாழொலி, கண்டத்தொலி முதலியவற்றாற்பெறும் செவியின்பமும், அகத்தே நிகழ்தலினானும் இவ்வாறிருந்ததெனக் கூறப்படாமையானும் அகமென வும் எல்லார்க்குந் துய்த்துணரப்படுதலின் புறமெனவும் கருதப்பட்டன வாய் அகம் புறம் என்னுமிரண்டனுள் ஒன்றனுளடங்காமையின் அவற்றை வேறெனல்வேண்டுமெனவும், அறமும் திருஷ்டபதார்த்த மன்மையானும் விதித்தன செய்தலும் விலக்கியன ஓம்பலும் அறத்தைப் பயப்பதன்றி அறமாகாமையானும் துய்த்துணரப்படாமையானும் அகத்தினும் புறத்தினும் அடங்காது நிற்றலின் வேறெனப்படல் வேண்டும் எனவும், வீடோ அவாங்மானசகோசரம் (சிந்தையுமொழியும் செல்லாநிலைமைத்து) ஆகலின் அதனையும் வேறெனக் கூறல்வேண்டும் எனவும், வெய்யில், கசப்பு, தீநாற்றம், பேயுரு, புலியுரு, வெஞ்சொல், நோய்முதலியவற்றான் வருந் துன்பங்களும் அகத்தினும் புறத்தினு மடங்காமையான் வேறெனப்படல்வேண்டுமெனவும், நிகழும் வினாக் களுக்கு விடைபகரவொண்ணாதாகலானும், களவு, கற்பு என்னுமிரண்ட னுள், களவொழுக்கமாகிய மறைவொழுக்கமே சிறப்புடைத்தாகலானும், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னு மிவற்றிற் புணர் தலே சிறப்புடைத்தாகலானும், அது மறைவாக (அந்தரங்கமாக) வே நிகழ்தலானும், களவினுள் தலைவன்றலைவி யிருவரும் பிரிதலும் வரை விடைவைத்துப் பொருள்வயிற்பிரிவிற் றலைவன்பிரிதலும் புணர்தற் பொருட்டாகலானும், அவையும் தாய்தந்தையர் அறியாதே நிகழ்தலா னும், கற்பினுட் பரத்தைவயிற்பிரிதலும் தலைவியறியாதே நிகழ்தலா னும், பின் மறைவாக வைகறைக்கண் மனைவிபாலடைதலானும், இரங்க லும் புணர்தற்பொருட்டாகலானும், ஊடலும் கூடற்பொருட்டாகலா

னும், நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் அகத்திணையியல் பதினாலாஞ் சூத்திர வுரையில் "அகப்பொருளாவது புணர்ச்சியாகலானும்" எனக் கூறியதனானும், வாயில்கள், பாங்கன், பாங்கிகள், தலைவன், தலைவிகள் பெயர்களைப் புலவரெல்லாரும் கூறாது செல்லுதலானும், ஆசிரியர் தொல் காப்பியனாரும் "மக்கணுதலியவகனைந்திணையுஞ் சுட்டியொருவர்ப் பெயர் கொளப்படார்" எனக் கூறியிருத்தலினானும், கூறின், புறமெனப்படுமாக லானும் அகப்பொருளாவது தலைவன் தலைவியரிருவருங் காமவின்பங் காரணமாக அந்தரங்கமாக (மறைவாக) ப்புணரும் புணர்ச்சியொழுக்கம் எனக் கொள்ளல்தகும். அகம்—அந்தரங்கம், எனவே அந்தரங்கமாக நிகழுமொழுக்கத்தைப் பகிரங்கமாக இன்னாரும் இன்னாரும் நிகழ்த்தி னார் எனப் புலவர்கள் தலைவன் தலைவியர்பெயர் தோன்றப் பாடுதன் மரபன்று. கூறுதல் அநுசிதமாம்.

புறப்பொருளாவது காமவின்பமல்லாத மற்றையின்பங்காரண மாகவும், அறங்காரணமாகவும், பொருள்காரணமாகவும், வீடுகாரண மாகவும் பகிரங்கமாக (வெளிப்படையாக) எல்லாரிடையும் நிகழும் ஒழுக்கம் எனக்கொள்ளல்தகும். புறம்-பகிரங்கம், வெளிப்படை. அது இளமரக்காஇயற்றல், தேவர்கோட்டம்இயற்றல், போர்புரிதல், வாணிகம்செய்தல், உழுதல், பசுவோம்பல், காட்டிற்புக்குச் சடைதாழத் தோலுடையாகப் பூவணையாக ஊரிற்புகாது சுடரோம்பல் முதலிய பல வகைப்படும்.

யாப்பாவது எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு ஆகிய இவ்வேழுறுப்பி னேடும் புணர்ந்து நடைபெறுவதாகும்.

அணியென்பது செய்யுட் கழகுபெறச் சொற்பொருள்களைப் புணர்ப்பது. அது சொல்லணியும், பொருளணியுமென இருவகைப் படும்.

ஒருவனுளத்துக் கணிதஉணர்ச்சியின்றேல் "ஒன்றிலிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினல் வென்று களங்கொண்ட வேல்வேந்தே", "நண்ணெருநாலொன்பதாம்", "படைகுடிகூழமைச்சுநட்பாணு", "உண்ணும்புனல்முக்கூறதின்", "ஐஞ்சுபூதம் பத்தாக்கி" எனவருஞ் செய்யுட்களின் உள்ள எண்ணுப்பொருள்களை உணரமுடியாமையான் இடர்ப்படும்.

தருக்கஉணர்ச்சியின்றேல் குணம் இன்னதென்பதும் குணிஇன்னதென்பதும் சாதிவியக்திஇன்னவென்பதும் தெரியாது, "அழுக்காறெனவொருபாவி" எனக் கூறியதனுற் குணத்தின்கண் குணமிருக்குமெனவும் உணர்ந்து இடர்ப்படுவன்.

சொல்லுணர்ச்சியின்றேல் உண்பாக்கு என்பதை உண்ணும்பொருட்டு எனக்கொள்ளாது உண்ணும் பாக்கு எனவும், வருவல் என்பதை வருவேன் எனக்கொள்ளாது ஒருவகைக் கறியெனவும், உயர்திணைச்சொல்லும் அஃறிணைச்சொல்லுங்கலந்து அஃறிணைமுடிபுகோடல் பிழையெனவும், சாத்தனை கொற்றனை என்பனவாகிய உருபேற்றசொற்களும் பெண்ணை, (பனை) செயற்கு, உண்டால், உண்டக்கடை என்பனவாதிய உருபேலாத சொற்களும் ஒரேதன்மையன எனவும், இன்னும் பலபடமாருகவும் கருதி இடர்ப்படுவன். ஆதலாற் கருவிநூல் கற்றபின்னரே முதனூல் கற்றல் தகும்.

இங்ஙனம்,

தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவன்,

நாராயணசாமி.

மதுரை.

திருச்சிராஷனல்கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும் நச்சிஞர்க்கினியன்பத்திராசிரியரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிருவாகசபை அங்கத்தினருள் ஒருவருமாயிருந்த

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்மீது

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர்

ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடிய

# இரங்கற்பாக்கள்.

1. செந்தமிழுமாங்கிலமுமொருங்குதேர்ந்து
சிறுவருள்ளுங்களிகூரத்தித்திப்பாகச்
சந்ததமும்போதித்தும்பிரசங்கித்தும்
தமிழமுதைமாணவர்க்குத்தருமாறூட்டிச்
சந்தமிகுமதுரையுயர்தரக்கல்லூரி
தனிலுமெழிற்சிராப்பள்ளித்தலத்தினேய
முந்துநேசநற்கல்லூரியிலுமின்ப
முதிர்தமிழ்ப்பண்டிதனுகிமுறையினுற்ருேய்.

2. பூபாலர்புகழ்மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்
புனிதநிருவாகசபைபொருந்துமங்க
மாபாலகரிலொருவனுகியென்போல்
வார்க்குநலம்புரிந்துவந்தமாண்புள்ளோனே
கோபாலகிருட்டிணப்பேர்நண்பாநீயிக்
குவலயவாழ்வினைத்துறந்து கோதிலாத
காபாலிபதமடைந்தசெயல்கேட்டுள்ளங்
கரைந்துவிழிநீர்பெருக்கிக்கவல்கின்றேனே.

3. உற்றதுணைமெய்ந்நண்பனிவனேயென்ன
வுவந்துபலரிடம்புகன்ருேயுனையிழக்கப்
பெற்றனனேயந்தோநின்மனைவிமக்கள்
பிரியசகோதரர்மருகர்முதலாவுள்ள
சுற்றமெலாமழுதாற்றவிண்ணூடுற்ருய்
தூயோயென்றுனைக்காண்பேன்ருேமிலாத
கற்றவருக்குறுதுணையேயன்பின்மிக்காய்
காலமெனுமோர்வலையைக்கடக்கலாமோ.

4. தந்தையேயாயினுந்தற்காக்குமன்ன
   தாதாவேயாயினுநற்றவத்தாலீன்ற
மைந்தரேயெனினுநண்பரெனினுமீன்ற
   மாதாவேயெனினுநடுவழங்கும்வாய்மை
சிந்தைமாறாதுரைக்குமோர்மையெங்கே
   திறனெங்கேபிரசங்கத்திறமையெங்கே
யிந்தநாளிவையனைத்துமெங்கேவைத்தா
   யெங்கொளித்தாயினிக்காண்பதெந்தநாளே.

5. பார்புகழும்நச்சினார்க்கினியனென்னும்
   பத்திரிகாசிரியனெனப்பலரும்போற்றச்
சீர்திகழுமரியபெருவிஷயதானஞ்
   செந்தமிழ்நாட்டினுக்குவந்துசெய்தசீலா
ஏர்திகழுங்கோபாலகிருட்டிணப்பே
   ரன்றுணைவாநின்பிரிவையெண்ணியெண்ணிக்
கார்பொழியுமழையினைப்போற்கண்ணீர்சோர்ந்து
   கலுழுமெங்கள்செயலனைத்துங்காண்பாய்கொல்லோ.

6. இந்தநாள்நின்பிரிவுக்காற்றாதியாரு
   மிரங்குவரென்றெண்ணாதுன்னிறுதிநாளில்
வந்ததோர்பிணியுடனுஞ்சிரத்தானந்த
   மாண்புடையரிறந்தமைக்குவருந்திப்பாக்கள்
சிந்தையார்வத்துடனேசிலைநேர்நெஞ்சுஞ்
   சிதைந்துருகச்செப்பினையேசீரியோய்நீ
யெந்தநாளெங்கவலைமாற்றுவிப்பா
   யென்றுன்மலர்முகங்காண்பேமியம்புவாயே.

7. செய்யபிரபவவருடமேடத்திங்கள்
   தேதியைந்துதினநாதன்றினஞ்சீர்மிக்க
துய்யபூரணைத்திதிசித்திரைநாளொரீ
   தொல்லுலகிலெமைப்பிரிந்துதுயரந்தந்த
வெய்யநாள்கோபாலகிருட்டிணப்பேர்
   மேலோனேவேதியர்மாமணியேதூய
மெய்யனேநினைப்பிரித்ததந்தோதொல்லை
   விதிவலியேவலியதையார்விலக்குவாரே.

உ

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் அக்ஷயவருஷ பங்குனிமீ 22, 23, 24

(1927-ம்வருஷ ஏப்ரல்மீ 4, 5, 6)-ஆம் தேதிகளில் நடத்திய

தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப்

பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின்

## அபிதானபத்திரம்.

—※—

### பாலபண்டித பரீக்ஷை.

#### 2-வது வகுப்பு.

| தொடர்ந்த எண். | ரிஜிஸ்டர் எண். | |
|---|---|---|
| 1 | 7 | G. N. நரசிம்மையர், செண்டமநாயக்கனூர், பெரியகுளம் தாலூகா. |
| 2 | 11 | வெ. இராகவேந்திரராவ், வீராசாமிமுதலியார் பாடசாலை, இராஜவீதி, கோயம்புத்தூர். |

### பிரவேச பரீக்ஷை.

#### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 43 | M. சுப்பிரமணியபிள்ளை, தலைமையுபாத்தியாயர், செந்தமிழ்ப்பாடசாலை, திருவனந்தபுரம். |

(முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்)

## 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 26 | மா. அ. சுயம்பிரகாசன், மார்சேரி, கோவிலடிபோஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா. |
| 2 | 34 | வீ. ஷண்முகம், அஞ்சாருவாத்தலை, குற்றாலம், தஞ்சாவூர் ஜில்லா. |
| 3 | 29 | இ. ரா. நடராஜன், ஆசிரியன், சித்திரக்குடி, பூதலூர் போஸ்டு. |
| 4 | 37 | T. செல்லச்சாமிப்பாண்டியன், பொய்கை, சாம்பூர் வடகரைப்போஸ்டு, தென்காசித்தாலூகா. |
| 5 | 52 | ஆ. குருசாமிபண்டாரர், மீன்சுருட்டிபோஸ்டு, உடையார்பாளையம் தாலூகா, திருச்சி ஜில்லா. |
| 6 | 50 | N. S. ஆறுமுகம்பிள்ளை, அப்பாச்சிக்கவுண்டன்பதி, போத்தனூர் போஸ்டு. |

B இராஜராஜேஸ்வரசேதுபதி,

அக்கிராஸநாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

24—8—27.

# ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1927ஹு மார்ச்சுமீ 5உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணுக்கர்களின்

## அபிதானபத்திரம்.

### பீ. ஏ., பரீக்ஷை.

#### 2-வது வகுப்பு.

| தொடர்ந்த நர். | ரிஜிஸ்டர் நர். | |
|---|---|---|
| 1 | 3 | S. ஆறுமுகம், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி. |
| 2 | 1 | A. பொன்னம்மாள், ஷை ஷை |

### எப். ஏ., பரீக்ஷை.

#### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 25 | S. முத்துஸாமி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 2 | 54 | G. R. வரதராஜன், ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம். |
| 3 | 27 | P. V. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 4 | 48 | A. முத்தையா, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி. |
| 5 | 17 | S. V. நாராயணன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 6 | 40 | A. K. பரந்தாமமுதலியார், பச்சையப்பா காலேஜ், சென்னை. |
| 7 | 19 | G. சுப்பிரமணியன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |

| | | |
|---|---|---|
| 8 | 62 | T. R. இராமாநுஜன், ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம். |
| 9 | 49 | T. S. குஞ்சிதபாதம், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி. |
| 10 | 26 | V. நடராஜன், முனிசிபல் காலேஜ், சேலம். |

## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 295 | M. ரிஸ்வானுல்லாகான், போர்டுஹைஸ்கூல் பண்ணுருட்டி. [முதற்பரிசு ரூபா 30 (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்)]. |
| 2 | 176 | P.V. நவநீதம், போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு, தஞ்சாவூர் ஜில்லா. (இரண்டாவது பரிசு ரூபா 25.) |
| 3 | 83 | S. இராகவன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். (மூன்றவதுபரிசு ரூபா 20.) |
| 4 | 291 | V. K. அரங்கநாதன், போர்டு ஹைஸ்கூல், பண்ணுருட்டி. (நான்காவது பரிசு ரூபா 15.) |
| 5 | 296 | V. A. அருணாசலசெட்டி, ஷை ஷை (ஐந்தாவது பரிசு ரூபா 12.) |
| 6 | 80 | M. வீரபாண்டியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். |

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 227 | P. இராமச்சந்திரன், St. Xavier's High School, தூத்துக்குடி. |
| 2 | 82 | S. உமாக்காந்தன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 3 | 213 | K. முருகையன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி. |
| 4 | 222 | N. சுப்பிரமணியன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம். |
| 5 | 145 | P. N. வரதராஜுலு, மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு. |
| 6 | 81 | P. சுப்பிரமணியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 7 | 78 | S. ராமையாத்தேவர், ஷை ஷை |
| 8 | 248 | A. P. குருசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 9 | 135 | C. P. சுந்தரேஸ்வரன், கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். |

| | | |
|---|---|---|
| 10 | 97 | P. M. முத்துசாமி, St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 11 | 98 | N. K. அழகப்பன், ஷை ஷை |
| 12 | 344 | S. முத்தையா, போர்டு ஹை ஸ்கூல், நாங்குனேரி. |
| 13 | 77 | V. ஷண்முகசுந்தரம், ராஜா ஹை ஸ்கூல், இராமநாதபுரம். |
| 14 | 87 | T. C. ஜெகந்நாதன், போர்டு ஹை ஸ்கூல், முசிரி. |
| 15 | 106 | M. ஜோஸப் பாண்டியராஜ், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 16 | 304 | K. S. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம். |
| 17 | 88 | S. கணபதி, St. John's College, திருநெல்வேலி. |
| 18 | 221 | G. சின்னத்தம்பி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம். |
| 19 | 269 | C. தேவராஜன், முனிசிபல் ஹை ஸ்கூல், விழுப்புரம். |
| 20 | 228 | A. இலக்குமணன், St. Xavier's High School, தூத்துக்குடி. |
| 21 | 306 | V. சுந்தரம், ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம். |
| 22 | 122 | R. V. ஜெயராமன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 23 | 123 | M. S. கிருஷ்ணமூர்த்தி, ஷை ஷை. |
| 24 | 93 | T. S. இராமலிங்கம், St. John's College, திருநெல்வேலி. |
| 25 | 237 | A. தக்ஷிணாமூர்த்தி, டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை. |
| 26 | 335 | S. சையத்முஹையதீன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி. |
| 27 | 254 | S. R. சுப்பிரமணியன், ஹை ஸ்கூல், பத்தமடை. |
| 28 | 101 | C, A. மீனாக்ஷிசுந்தரம், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 29 | 149 | K. K. சுந்தரம், மஹாஜன ஹை ஸ்கூல், ஈரோடு. |
| 30 | 153 | S. சேஷாத்திரி, ஷை ஷை |
| 31 | 180 | P. சடகோபன், ஹை ஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி. |
| 32 | 196 | T. K. இராமநாதன், கலவல இராமாநுஜம் உயர்தர பாடசாலை, வேப்பேரி, சென்னை. |

| | | |
|---|---|---|
| 33 | 128 | S. S. சந்தானம், கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். |
| 34 | 266 | T. S. சுவாமிநாதன், போர்டு ஹை ஸ்கூல், நன்னிலம். |
| 35 | 100 | G. அந்தோணிமுத்து, St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 36 | 95 | A. ராஜாமணி, டிை டிை |
| 37 | 107 | S. புதுமை, டிை டிை |
| 38 | 108 | G. ராமசுப்பன், டிை டிை |
| 39 | 111 | R. ராமகிருஷ்ணன், போர்டு ஹை ஸ்கூல், கடயநல்லூர். |
| 40 | 133 | S. V. வெங்கிடரமணன், கவர்ன்மெண்டுகாலேஜ், கோயம்புத்தூர். |
| 41 | 334 | A. முஹையதீன், போர்டு ஹை ஸ்கூல், நாங்குனேரி. |
| 42 | 99 | V. K. நாராயணன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 43 | 143 | K. P. ஆறுமுகம், மஹாராஜன ஹை ஸ்கூல், ஈரோடு. |
| 44 | 229 | P. பாலசுப்பிரமணியன், St. Xavier's High School, தூத்துக்குடி. |
| 45 | 103 | M. திருமலையப்பன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 46 | 131 | K.N. லக்ஷ்மீநாராயணன், கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். |
| 47 | 132 | P. V. சுப்பிரமணியன், டிை டிை |
| 48 | 187 | N. V. ஸ்ரீநிவாஸன், வெஸ்லி காலேஜ், ராயப்பேட்டை. |
| 49 | 177 | V. G. கலியப்பெருமாள், போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு. |
| 50 | 305 | T R. சீனிவாஸன், ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம். |
| 51 | 337 | P. S. சுந்தரசுப்பிரமணியன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி. |
| 52 | 68 | M. K. முசாகுமீராலெவை, விக்டோரியா மெமோரியல் ஹை ஸ்கூல், போடிநாயக்கனூர். |
| 53 | 113 | V. ராமையா, போர்டு ஹை ஸ்கூல், கடயநல்லூர். |

| | | |
|---|---|---|
| 54 | 253 | V. S. கணேசன், ஹைஹ ஸ்கூல், பத்தமடை. |
| 55 | 257 | R. சங்கரநாராயணன், ஷை ஷை. |
| 56 | 302 | K. விஸ்வலிங்கம், ஸ்ரீபூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம். |
| 57 | 333 | T. T. ஸ்ரீநிவாஸன், போர்டு ஹைஹ ஸ்கூல், நாங்குனேரி. |
| 58 | 342 | V. V. சங்கரன், ஷை ஷை |
| 59 | 318 | K. கிருஷ்ணமாச்சாரியர், வெஸ்லியன் மிஷன் ஹைஹ ஸ்கூல், திருவள்ளூர். |
| 60 | 89 | S. இராமாநுஜர், St. John's College, திருநெல்வேலி. |
| 61 | 129 | G. R. சுப்பரத்தினம், கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். |
| 62 | 270 | S. ராஜலிங்கம், முனிசிபல் ஹைஹஸ்கூல், விழுப்புரம். |
| 63 | 290 | M.V. சுந்தரராமன், A. A. M. ஹைஹஸ்கூல், திண்டிவனம். |
| 64 | 195 | க. பழனிவடிவேலு, வெஸ்லி காலேஜ், ராயப்பேட்டை. |
| 65 | 230 | A. Y. சுந்தரம், St. Xavier's High School, தூத்துக்குடி. |
| 66 | 238 | S. அப்பர், டேனிஷ் மிஷன் ஹைஹஸ்கூல், திருவண்ணாமலை |
| 67 | 262 | K. M. கிருஷ்ணஸ்வாமி, ஹைஹஸ்கூல், பத்தமடை. |
| 68 | 340 | N. A, ஸ்ரீநிவாஸன், போர்டு ஹைஹஸ்கூல், நாங்குனேரி. |
| 69 | 343 | V. S. சுப்பிரமணியன், ஷை ஷை |
| 70 | 345 | T. கோபால ராவ் ஷை ஷை |
| 71 | 105 | K. S. சுவாமிநாதன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 72 | 134 | A. R. சக்கிரவர்த்தி, கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். |
| 73 | 139 | D. J. சுவாமிநாதன், ஸெண்ட் மிக்கேல் ஹைஹஸ்கூல், கோயம்புத்தூர். |
| 74 | 150 | V. வரதராஜுலு, மஹாராஜன ஹைஹஸ்கூல், ஈரோடு, |
| 75 | 284 | E. V. பத்மராஜன், A. A. M. ஹைஹஸ்கூல், திண்டிவனம் |
| 76 | 339 | N. S. ரகுநாதன், போர்டு ஹைஹஸ்கூல், நாங்குனேரி. |

| | | |
|---|---|---|
| 77 | 109 | S. சுப்பிரமணியன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 78 | 110 | S. குரூஸ் அந்தோணி, ஷை ஷை |
| 79 | 240 | D. சுப்பிரமணியன், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை. |
| 80 | 249 | A. J. ஹென்றி ஆமோஸ், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 81 | 84 | R. வெங்கடாசலம், போர்டு ஹைஸ்கூல், முசிரி. |
| 82 | 119 | P சுப்பிரமணியன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 83 | 125 | A. S. கந்தசாமி, ஷை ஷை |
| 84 | 182 | நேசம்அப்ஸலம், (பெண்) Sherman Girl's High School, சித்தூர். |
| 85 | 223 | V. ஜெகதீசன், விகடோரியா ஹைஸ்கூல், பாபநாசம். |
| 86 | 157 | N. பார்த்தசாரதி, மஹாஜன ஹைகூல், ஈரோடு. |
| 87 | 252 | M. எபனேசர் செல்லராஜ், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 88 | 272 | U. பூங்காவனம், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். |
| 89 | 286 | K. பார்த்தசாரதி, A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம். |
| 90 | 338 | K. R. இராமச்சந்திரன், போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி |
| 91 | 217 | P. M. வெங்கடவரதன், நேடிவ் ஹைஸ்கூல், செங்கற்பட்டு |
| 92 | 173 | மா. ராஜமாணிக்கம், St. Peter's High School, தஞ்சை. |
| 93 | 181 | கிறிஸ்டி டைடஸ் (Christy Titus) (பெண்), Sherman Girl's High School, சித்தூர். |
| 94 | 224 | K. சாம்பசிவம், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம். |
| 95 | 327 | S. இராமலிங்கம், ராமசாமிசெட்டியார் ஹைஸ்கூல், சிதம்பரம். |

**B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,**

அக்கிராஸநாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்,

24—8—27.